# மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 04 வியாழக்கிழமை 20.11.2025 கதிர் 376

# பஸ்ஸில் இருந்து தவறி விழுந்த நடத்துநர் பலி!

## - கோயில் உண்டியலில் காணிக்கை போட்டுவிட்டு ஏறும் போது துயரம்



திருகோணமலை, நவ. 20

திருகோணமலை, தம்பலகாமம் - பாலம்போட்டாறு பகுதியை இணைக்கும் பொலிஸ் சோதனை சாவடியில் பிரதான வீதி அருகில் பஸ்ஸில் இருந்து தவறி விழுந்ததில் பஸ் நடத்துநர் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

பாலம்போட்டாறு கண்டி - திருகோணமலை வீதியில் உள்ள கோயில் உண்டியலில் திருகோணமலை கந்தளாய் வரையான தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் போது, காணிக்கை 7➤

# அரசுக்கு எதிரான பேரணியை ஜீவனுக்காகக் கைவிட்ட ரணில்

## நாளை இந்தியாவுக்கு விஜயம்



கொழும்பு, நவ. 20

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக நுகேகொடையில் நாளை நடைபெறவுள்ள பேரணியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமானின் திருமண நிகழ்வில் பங்கேற்பதற்காக ரணில் நாளை இந்தியா செல்கின்றார் என முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் காரணமாகவே அவர் நுகேகொடை பேரணியில் பங்கேற்க சாத்தியம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நுகேகொடை பேரணியில் தான் பங்கேற்பார் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நுகேகொடை பேரணியில் நான் பங்கேற்கமாட்டேன்!

## நவீன் திஸாநாயக்க அறிவிப்பு



கொழும்பு, நவ. 20

அநுர அரசுக்கு எதிராக நுகேகொடையில் நாளை நடைபெறவுள்ள பேரணியில் தான் பங்கேற்க மாட்டேன் என்று ஐக்கிய தேசியக் 7➤

# ஆனந்தசுதாகரின் இரு பிள்ளைகளையும் பராமரித்து வந்த பேத்தியார் உயிரிழப்பு!



கிளிநொச்சி, நவ. 20

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் இரண்டு பிள்ளைகளையும் பராமரித்து வந்த பேத்தியார் நேற்று புதன் கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதியாக 17 ஆண்டுகள் சிறையில் இருக்கும் ஆனந்த சுதாகரின் மனைவி கடந்த 2018 ஆம் ஆண்டு கணவரின் பிரிவால் நோயுற்ற நிலையில் மரணமானார்.

இதனால் அநாதரவாக நிர்க்கதியாக நின்ற பிள்ளைகளை வயதான 7➤

# அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று குழந்தைகளைப் பாதுகாக்க வழிசமைக்க வேண்டும்

## 'குரல் அற்றவர்களின் குரல்' அமைப்பு கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 20

தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளைப் பராமரித்து வந்த பேத்தியாரான தேவதாஸ் கமலாவும் இறைவனடி சேர்ந்துவிட்டமை பெருந்துயரமே என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இரங்கல் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கிளிநொச்சி - மருதநகரைச் சேர்ந்த, அரசியல் 7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ‘21’க்கு ‘20’ போட்டி: சானக்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.20

அரசாங்கத்துக்கு எதிராக நாங்கள் 21 ஆம் திகதி நுகேகொடையில் மாபெரும் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம். இந்நிலையில், எமக்கு போட்டியாக ஜனாதிபதி 20 ஆம் திகதி தங்காலையில் மக்கள் கூட்டத்தை நடத்துகிறார். ஜனாதிபதியின் கூட்டத்துக்கு ஆட்களை திரட்டும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது எனஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி.யான டி.வி.சானக குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (19) அன்று இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அரசாங்கத்தின் கூட்டத்துக்கு பொதுமக்கள் எவரும் தன்னிச்சையாக செல்வதில்லை. ஆகவே ஜனாதிபதியின் கூட்டத்துக்கு ஆட்களை சேர்க்கும் பொறுப்பு பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.



ஹம்பாந்தோட்டை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் இந்த அரசியல் கூட்டத்துக்கு ஆட்களை சேர்க்கும் அறிவிப்பை ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விடுத்துள்ளார்.இதற்கமைய தங்காலை பொலிஸ் பிரிவில் இருந்து 397 பேர், பெலியத்த பொலிஸ் பிரிவில் இருந்து 420 பேர், வலஸ்முல்ல பொலிஸ் பிரிவில் இருந்து 360 பேர், வீரகெட்டிய பொலிஸ் பிரிவில் இருந்து 414 பேர், மித்தெனிய பொலிஸ் பிரிவில் இருந்து 246 பேர், அங்குனுகொல்ல பொலிஸ் பிரிவில் இருந்து 264 பேர், கிரிந்த பொலிஸ் பிரிவில் இருந்து 36 பேர், துறைமுக பொலிஸ் பிரிவில் இருந்து 36 பேர் , திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவில் இருந்து 198 பேர் என்ற அடிப்படையில் ஆட்களை அழைத்துவருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் பொய் என்று அரசாங்கத்தால் குறிப்பிட முடியுமா?ஜே .வி.பி.யின் செயற்பாடுகளுக்கு பொலிஸார் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகிறார்கள்என்றார்.(ஐ)

# திருமலை புத்தர்: “இரு தரப்புக்கும் தொடர்பே இல்லை”



“திருகோணமலைக் கடற்கரையில் புத்தர்சிலை வைக்கப்பட்ட விடயத்திலும்,பின்னர் சிலை பொலிஸாரினால் அகற்றப்பட்ட விடயத்திலும் இங்கு வாழும் தமிழ் மக்களுக்கோ,முஸ்லிம் மக்களுக்கு எவ்வித தொடர்பும் இல்லை என கல்யாண வன்ஸ திஸ்ஸ தேரர் கூறினார்.

இங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் என்னுடன் தனிப்பட்ட முறையில் மிகவும் நட்புணர்வுடனே பழகி வருகின்றனர்.ஆனால், பொலிஸாரே மிகவும் மோசமாக நடந்து கொண்டனர்,எனவே யாரும் இதனை இனரீதியான மோதல் என்று கூறி விடயத்தை திசை திருப்ப வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

புதன்கிழமை (19) அன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் ே பாதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்

“திருகோணமலை கடற்கரையில் 1952 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்தின் முதலாவது தர்ம பாடசாலை இயங்கி வந்தது.2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரலையினால் இங்கிருந்த பாடசாலை கட்டிடம் முற்றாக அழிவடைந்தது. அது பின்னர் புனரமைக்கப்படவில்லை.எனினும் நீண்டகாலமாக இதனை புனரமைக்க வேண்டும் என விரும்பினோம்.இந்நிலையில் இம்மாதம் இது தொடர்பில் எமது விகாரையின் நிர்வாக்குழுவின் தீர்மானப்படி அழிவடைந்த கட்டிடத்தை கட்டுவது என தீர்மானிக்கப்பட்டது. நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள், நீதியை,சட்டத்தை மதிக்கின்றோம்.எமக்கு உரிய நீதி கிடைக்கும் என நம்புகின்றோம்” என கூறினார் (ஐ)



# திருகோணமலை புத்தர் சிலை முழுமையாக திட்டமிட்ட இனவாத செயற்பாடு! தேரர் குற்றச்சாட்டு

திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் முழுமையாக திட்டமிட்ட இனவாத செயற்பாடு இராஜாங்கனை சத்தாரத்தன தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

திருகோணமலை புத்தர் சிலை தொடர்பில் பலாங்கொட கஸ்ஸப தேரருக்கு நெருங்கிய தொடர்புள்ளது. கஸ்ஸப தேரர் முழுமையான இனவாதி எனவும் சாடியுள்ளார்.

கஸ்ஸப தேரருக்கு பணம் கொடுத்தால் அவர் என்ன வேண்டுமானாலும் செய்யக்கூடிய ஒருவர் என சத்தாரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கஸ்ஸப தேரர் தலையிடும் விடங்களில் குழப்பங்கள் ஏற்படுவது வழமையான ஒன்றாகும். அதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி அரசுக்கு எதிராக பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த பேரணி, சமகால அரசாங்கத்தை கவிழ்க்க நாமல் ராஜபக்சவினால் முன்னெடுக்கும் செயற்பாடாகும் என்றும் சத்தாரத்தன தேரர் குறிப்பிட்டுள்ளார்.



திருகோணமலைக்கு அடுத்தடுத்து தேரர்கள் செல்கின்றார்கள். ஞானசார தேரரும் சென்றார். அப்படி என்றால் ஏதோ ஒரு பிரச்சினை உள்ளதென அனைவருக்கும் தெரியும்.

தவறான விடயங்களுக்கு நாங்களும் எதிர்ப்பு தான். அரசாங்கத்தை கவிழ்க்க இந்த மோசடியாளர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்.

அதற்கான இனவாதம் மதவாதம் தூண்டப்படும் என நான் பயமின்றி கூறுவேன். இந்த மோசடி செயற்பாடுகளில் ஏமாற வேண்டாம் என நான் பொது மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

போதை பொருள் கடத்தல்காரர்கள், ஏமாற்றுக்காரர்கள், திருடர்களால் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இராஜாங்கனை சத்தாரத்தன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் இராஜாங்கனை சத்தாரத்ன தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திருகோணமலையில் இனக்கலவரத்தை தூண்ட முயற்சி
## குழப்பவாதிகள் அடையாளம் - சிங்கள அமைப்பாளர் குற்றச்சாட்டு




திருகோணமலை மாவட்டத்தில் அண்மையில் சிலை அகற்றப்பட்ட விடயத்தை சிலர் இனப்பிரச்சினையாக மாற்ற முயற்சிப்பதாகவும், அவர்கள் தோல்வியடைந்த அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலின்படி செயல்பட்டு குழப்பத்தை ஏற்படுத்த முயல்வதாகவும் வடக்கு கிழக்கிற்கான சிங்கள அமைப்பின் அமைப்பாளர் இன்று திருகோணமலையில் வைத்து குற்றம் சாட்டினார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "இத்தகைய குழப்பவாதிகள் இருவர் கொழும்பில் இருந்து சில தினங்களுக்கு முன்னர் இங்கு வந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம் என தெரிவித்தார்.

இனப்பிரச்சினை இல்லை - நல்லுறவு நிலவுகிறது

திருகோணமலையில் எவ்வித இனப்பிரச்சினையும் இல்லை என்பதை வலியுறுத்திய அவர், இங்குள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லீம் மக்கள் எமக்கோ அல்லது புத்தர் சிலை வைக்கப்பட்ட விடயத்திற்கோ எதிர்ப்பானவர்கள் அல்ல. எனவே நாட்டு மக்கள் குழப்பமடைய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அரசியல் அபிலாஷைகளுக்கு பலியாக வேண்டாம்

சிலரின் அரசியல் அபிலாஷைகளுக்கு யாரும் பலியாக வேண்டாம் என்றும், அவர்களின் குறுகிய மற்றும் இனவாத அரசியலுக்கு திருகோணமலையைப் பயன்படுத்த நாம் அனுமதிக்க மாட்டோம் என்றும் சிங்கள அமைப்பின் அமைப்பாளர் உறுதியாகத் தெரிவித்தார். (ஐ)



# பாடசாலை மாணவர்களிடையே புகைத்தல் அதிகரிப்பு..! – வைத்தியர் எச்சரிக்கை

பாடசாலை மாணவர்களிடையே புகைத்தல் பழக்கம் அதிகரித்துள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் சுவாச நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் துமிந்த யசரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

14 அல்லது 15 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் பலர் சிகரெட்டுகளைப் பரிசோதித்துப் பார்க்க முனைகின்றனர் என தெரிவித்துள்ளார்.

னஇந்த வகையில் புகைபிடிப்பது நுரையீரல் தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்குப் பெரிதும் வழிவகுக்கும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சுவாச நோய்கள் தொடர்பான விசேட வைத்தியர் துமிந்த யசரத்ன தெரிவித்தார். (ஐ)

# தமிழ் மக்களிடம் சஜித் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்! – சிறீதரன் வலியுறுத்து

திருகோணமலை புத்தர் சிலை விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறிய கருத்தை மீளப்பெற வேண்டும். தமிழ் மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்றால் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் என்று எண்ணி தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். அந்தத் தமிழ் மக்களுக்கு சஜித் துரோகமிழைத்துள்ளார்.- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சுகளுக்கான நிதி துக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர் மேலும் பேசுகையில்,

திருகோணமலையில் புத்தர் சிலை ஒன்று பிரதிஸ்டை செய்த விவகாரம் தமிழ் மக்கள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. வரலாற்று ரீதியாக பார்த்தால் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் எவரும் அரச அதிபர்களாகப் பதவி வகிக்கவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழரின் இனப் பரம்பலை இல்லாதொழிப்பதற்குத் தொடர்ச்சியாகச் சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன.

இதனடிப்படையில் தான் அண்மையில் புத்தர் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. அது இன்று இனவாதப் பூதமாக வெளிவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன பிக்குகளைக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக அரசியல் செய்தார். இந்த அரசாங்கமும் அதே வழியிலேயே பயணிக்கின்றது.

திருகோணமலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் புத்தர் சிலை வைக்கப்படுகின்றது. அது பொலிஸாரால் அகற்றப்படுகின்றது. பின்னர் பொலிஸாரால் அதே இடத்தில் வைக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்தச் சம்பவத்தை தேசிய பிரச்சினையாகப் பார்க்க வேண்டும், புத்தர் சிலையை அதே இடத்தில் வைக்க வேண்டும் என்று ஆக்ரோஷமாகக் குறிப்பிட்டது ஆச்சரியமாக உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்றால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று எண்ணி தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். எனவே, சஜித் பிரேமதாஸ இந்தக் கருத்தை மீளப்பெற வேண்டும். தமிழ் மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

தமிழர்களுக்குச் சஜித் துரோகமிழைத்துள்ளார். அவர் பகிரங்க மன்னிப்புக் கோரினால்தான் அது இந்த நாட்டில் ஒரு நீதியாக அமையும்.

இந்த நாட்டில் மதத்தை முன்னிலைப்படுத்தித்தான் காலம்காலமாக பிரச்சினைகள் தோற்றம் பெற்றன.



திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் 30 விகாரைகள் கட்டப்படுகின்றன.

திரியாய் பகுதியில் இரண்டு சிங்களவர்களுக்காக ஒரு விகாரை கட்டப்படுகின்றது. கிழக்கில் பல இடங்களில் காணிகள் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றப்பட்டு விகாரைகள் கட்டப்படுகின்றன. அரசாங்கம் இதனைத் தடுக்க வேண்டும். இல்லையேல் இந்த நாட்டில் நல்லிணக்கம் இல்லதொழியும். இது மிகவும் அபாயகரமானது.

ஜனாதிபதியுடன் நடைபெற்ற சந்திப்பின் போது திருகோணமலை விவகாரம் பற்றி பேசினோம். அவரும் ஒருசில விடயங்களை ஏற்றுக்கொண்டார். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி சபையில் ஆற்றிய உரை நம்பிக்கையளித்துள்ளது.

இருப்பினும் சகல விடயங்களிலும் நம்பிக்கைகொள்ள முடியாது. இந்த விவகாரத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்போது ஏன் யாழ். தையிட்டி விகாரை குறித்து அவதானம் செலுத்தவில்லை என்று கேள்வி எழுகின்றது. ஆகவே சிலைகளை அடிப்படையாகக் கொண்டு முரண்பாடுகள் திட்டமிட்ட வகையில் தோற்றுவிக்கப்படுகின்றன. அரசாங்கம் இதனைத் தடுத்தேயாக வேண்டும். - என்றார். (ஐ)

# தொடர் வெடிகுண்டு மிரட்டல் எதிரொலி சென்னை விமான நிலையத்தில் சோதனைகளால் பயணிகள் அவதி: புறப்பாடு விமானங்களும் தாமதம்



சென்னை விமான நிலையத்திற்கு தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் புரளிகள் காரணமாக, பலகட்ட சோதனைகள் துருவிதுருவி நடப்பதால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். விமானங்களும் தாமதமாக செல்கின்றன. டெல்லி செங்கோட்டையில் கார் குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து, நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதோடு சென்னை விமான நிலையத்திலும் அன்றைய தினத்தில் இருந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டதோடு 5 அடுக்கு பாதுகாப்பு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், சென்னை விமான நிலையத்திற்கு தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல்கள் வந்துகொண்டு இருக்கின்றன. இதனால் சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பாடு விமானங்களில் பயணம் செய்யும்பயணிகளுக்கு நடக்கும் சோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகிறது.

அதோடு பயணிகளின் ஷூக்கள், பெல்ட்கள், குளிருக்காக அணிந்து இருக்கும் ஜாக்கெட்கள் உள்ளிட்டவைகள் அனைத்தையும் கழற்றி, ஸ்கேன் மூலம் பரிசோதித்து பின்பு மீண்டும் எடுத்து அணிந்து கொண்டு செல்வதற்கு அனுமதிக்கின்றனர். அதேபோல் ஷூக்கள், பெல்ட்கள், ஜாக்கெட்டுகள் போன்றவைகளை கழற்றி பாதுகாப்பு சோதனைக்கு வைப்பதில் காலதாமதம் செய்வதால் பயணிகளுக்கு நடக்கும் பாதுகாப்பு சோதனைகளும் தாமதமாகின்றன. இவ்வாறு பல கட்ட சோதனைகளால், காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் சென்னையில் இருந்து வெளிநாடுகளுக்கு புறப்பட்டுச் செல்லும் விமானங்கள் தாமதமாக புறப்பட்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று அதிகாலை சென்னையில் இருந்து வெளிநாடுகள் செல்லக்கூடிய பல விமானங்களில் பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.

அதோடு பயணிகளுக்கான பாதுகாப்பு சோதனைகளும் பல கட்டங்களாக தொடர்ந்து நடந்ததால் பயணிகள் விமானங்களில் ஏறுவது தாமதமாகி சென்னையில் இருந்து ஜெர்மன் நாட்டின் பிராங்க்பர்ட் நகருக்கு செல்லும் லூப்தான்ஷா ஏர்லைன்ஸ், துபாய் செல்லும் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ், கோலாலம்பூர் செல்லும் ஏர் ஏசியா ஏர்லைன்ஸ், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், தோகா செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ், தாய்லாந்து செல்லும் தாய் ஏர்லைன்ஸ், சார்ஜா செல்லும் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ், அபுதாபி செல்லும் ஏர் அரேபியன் ஏர்லைன்ஸ், அபுதாபி செல்லும் எத்தியாட் ஏர்லைன்ஸ், மஸ்கட் செல்லும் ஓமன் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட விமானங்கள், சுமார் 30 நிமிடங்களில் இருந்து ஒரு மணி நேரம் வரை தாமதமாக புறப்பட்டு சென்றன.

எனவே, இதுபோல் பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும் போதும், பயணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு சோதனைகள் நடக்கும் போதும் இந்த சோதனைகளை நடத்தும் பாதுகாப்பு படை அதிகாரிகளான மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை கூடுதலாக பணியில் அமர்த்துவதோடு, பாதுகாப்பு சோதனை பணிகளை விரைந்து நடத்துவதற்கான பயிற்சி பெற்ற வீரர்களையும் பணியில் அமர்த்த வேண்டும். அதோடு பெரும்பாலான மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் இந்தியில் மட்டுமே பேசுவதால் பாதுகாப்பு சோதனைகள் தாமதம் ஏற்படுகிறது. எனவே தமிழ் அல்லது ஆங்கிலம் பேசக்கூடிய வீரர்களை, இதேபோன்ற பாதுகாப்பு சோதனை பகுதிகளில் அதிகமாக நியமிக்க வேண்டும் என்று பயணிகள் தரப்பில் கூறுகின்றனர். (ஐ)

# நெல் கிடங்குகளுக்கான நிதி ரூ.309 கோடி எங்கே சென்றது?: அண்ணாமலை



நெல் விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றையும் நிறைவேற்றாமல், ஒவ்வொரு ஆண்டும் நெல் கொள்முதல் செய்வதற்கு, தாமதம் ஏற்படுத்தப்படுகிறது. நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முளை விட துவங்கிய நிலையில், மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதாக, ஏமாற்று வேலை நடத்தி கொண்டிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

கடந்த நான்கு ஆண்டு தி.மு.க., ஆட்சியில், சேமிப்பு கிடங்குகள், உணவு கிடங்குகள் அமைக்க, 309 கோடி ரூபாய் செலவிட்டதாக, தி.மு.க., அரசு கூறியிருக்கிறது. ஆனால், விவசாயிகள் இன்றும் சாலையில் நெல்லை உலர வைக்கும் அவலம் தொடர்கிறது. எங்கே சென்றது, 309 கோடி ரூபாய் நிதி?

தி.மு.க., அரசின் ஊழலாலும், தவறுகளாலும் தமிழக நெல் விவசாயிகள் துன்பப்பட வேண்டுமா? கிடங்குகள் இல்லாமல் அவதிப்படும் விவசாயிகளுக்கு நிரந்தர தீர்வு, பாதுகாப்பான கிடங்குகள் தானே தவிர, தி.மு.க.,வின் கடித நாடகம் அல்ல. (ஐ)




# நாடு முழுதும் 9 கோடி விவசாயிகளுக்கு ரூ.18,000 கோடி நிதியுதவி விடுவிப்பு

தென்னிந்திய இயற்கை வேளாண் கூட்டமைப்பு சார்பில், தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாடு, கோவை 'கொடிசியா' வளாகத்தில் நேற்று துவங்கியது.

இயற்கை வேளாண்மையில் தயாரிக்கப்பட்டு, விளைபொருட்களை மதிப்புக் கூட்டிய பொருட்களாக உருவாக்கி சந்தைப்படுத்துவது தொடர்பான கண்காட்சியை, பிரதமர் மோடி பார்வையிட்டு, விவசாயிகளிடம் உரையாடினார்.

இயற்கை வேளாண்மை செய்வதற்கு ஏற்படும் இடர்பாடுகள், சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து நேரடியாக கேட்டறிந்தார்.

அதன்பின், வேளாண் மாநாட்டை துவக்கி வைத்து மோடி சிறப்புரை ஆற்றினார்.

பிரதமருக்கு, ஒருங்கிணைப்பாளர்கள் கருப்பையா, பி.ஆர்.பாண்டியன் ஆகியோர் இணைந்து மாலை அணிவித்து வரவேற்றனர்.

பருத்தித்துணியில் பாரத மாதா, பிரதமர் மோடி மற்றும் ஏர் உழவன் ஆகிய புகைப்படங்களுடன் நெசவு செய்யப்பட்ட சால்வையை, அத்திக்கடவு சுப்ரமணியம் அணிவித்து, கவுரவித்தார்.

மாநாடு நினைவாக, பிரதமருக்கு மாட்டு வண்டி சிலை பரிசாக வழங்கப்பட்டது. பின், வாழை நாரால் மோடியின் படம், வாழை விதைகள் தயாரிக்கப்பட்ட கூடை, கம்பர் எழுதிய புத்தகங்கள் வழங்கப்பட்டன.

பி.எம்.கிசான் சம்மான் திட்டத்தில், நான்கு மாதத்துக்கு ஒருமுறை 2,000 ரூபாய் வீதம் ஆண்டுக்கு மூன்று முறை மொத்தம் 6,000 ரூபாய் விவசாயி களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. அவ்வகையில், 9 கோடி விவசாயிகளுக்கு, 21வது தவணையாக, 18,000 கோடி ரூபாயை மேடையில் பிரதமர் மோடி விடுவித்தார். அந்த தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்குவது, பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் சிறந்து விளங்கும் ஏழு விவசாயிகளுக்கு, பிரதமர் விருது வழங்கி கவுரவித்தார். (ஐ)

# ஆட்சியில் பங்கு பேச்சு நடத்தவில்லை!



*கோவையில் ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ அளித்த பேட்டி: எஸ்.ஐ.ஆர்., எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியின் வாயிலாக, மிகப் பெரிய ஜனநாயக மோசடியை செய்ய உள்ளனர். இதில் தேர்தல் கமிஷனின் போக்கு, ஒருதலைபட்சமாக உள்ளது.*

*எனவே, எஸ்.ஐ.ஆர்., பணிகளை நிறுத்தக்கோரி, ம.தி.மு.க., சார்பிலும், நீதிமன்றத்தில் வாதம் முன்வைக்க இருக்கிறோம். வரும் 2026 சட்டசபை தேர்தலுக்கு பின், தி.மு.க., ஆட்சி தொடர, ம.தி.மு.க., ஆதரவு அளிக்கும்.*

*ஆட்சியில் பங்கு கேட்பது தொடர்பாக, கூட்டணியில் இருக்கும் மற்ற கட்சியினர் பேசி வரலாம். ஆனால், நாங்கள் ஆட்சியில் பங்கு கேட்டு எதுவும் பேசமாட்டோம். அது தொடர்பாக, இதுவரை எந்த பேச்சும் நடத்தவில்லை.*

*போதை ஒழிப்பு, ஜாதி மோதலை தடுக்க வலியுறுத்தி, ஜன., 2ல், திருச்சி - மதுரை, சமத்துவ நடைபயணம் மேற்கொள்கிறேன். அதில் பங்கேற்கும் இளைஞர்கள், தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து தேர்வு செய்யப்படுகின்றனர். தமிழகத்தில், முழு மதுவிலக்கு அமல்படுத்த, அரசு முன்வர வேண்டும்.*

*டாஸ்மாக் மதுக்கடைகளின் எண்ணிக்கையை குறைப்பதால் மட்டும், எந்தவித பிரயோஜனமும் இல்லை. போதை பொருட்கள் கடத்தி விற்பவர்களை தண்டிக்கும் வகையில், அது தொடர்பான சட்டத்தை இன்னும் கடுமையாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.*

*(ஐ)*

# பெண்களும் புனித பிம்பங்களும்





பண்டைக்கால ரோமானியர்களின் சுதந்திர சின்னமாகக் கருதப்படுவது லிபர்ட்டஸ் என்னும் பெண் கடவுள். அதையொட்டி அமைக்கப்பட்ட சிலைதான் அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை. இந்தியாவிலும் பாரத மாதா, நீதி தேவதை என்று எல்லா பாரங்களையும் பெண் உருவங்களே தூக்கிச் சுமக்கின்றன. நாடு, நதி, கடவுள் என்று இப்படி அனைத்துப் புனிதங்களையும் தாங்கி நிற்பவர்களாகப் பெண்கள் உருவகப்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது, ஆஹா இந்த நாட்டில் பெண்ணாகப் பிறந்ததற்காக உண்மையிலேயே பெருமைப்பட வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறதா?

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் சார்பான குற்றங்களில் உலகிலேயே மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இந்தியா கருதப்படுகிறது. பெண்களுக்கான பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இந்தியா 133வது இடத்தில் இருக்கிறது. ஒவ்வோர் இருபது நிமிடங்களுக்கும் இந்தியாவில் ஒரு பெண் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்.

எங்கள் காலத்தில் எல்லாம் அப்படி இல்லை, இப்போதுதான் இத்தகைய குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன என்று சிலர் குறைபட்டுக் கொள்கின்றனர். பரவலாகி இருக்கும் சமூக ஊடகங்களே இதற்குக் காரணம் என்றும் குற்றம் சாட்டுகின்றனர். இன்னும் சிலர் ஒருபடி மேலே போய் பெண்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதே இதற்குக் காரணம் என்றும் அங்கலாய்க்கின்றனர். ஆனால் உண்மையிலேயே பரவலாக்கப்பட்ட கல்வியறிவும், விழிப்புணர்வும் பெண்கள் இத்தகைய குற்றங்களைப் புகார் செய்வதற்கான வாய்ப்புகளை அதிகரித்து இருக்கிறது. எனினும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனை பெறும் விகிதம் இந்தியாவில் வெறும் 26%தான். கனடாவில் இது 42%, இங்கிலாந்தில் 63% ஆக இருக்கிறது. இந்தியாவில் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்கு ஆளான 74 சதவீதத்தினர் பண பலத்தாலும், அரசியல் பின்புலத்தாலும் தண்டிக்கப்படாமல் தப்பிவிடுகின்றனர்.


இன்றைய திகதியில் பெண் குழந்தைகளைப் பெற்ற பெற்றோரின் முதன்மையான பயம் தன் பெண்ணுக்கு யாராலும் பாலியல் துன்புறுத்தல் நேர்ந்து விடக் கூடாது என்பதுதான். இந்த பயம் பெண் குழந்தைகளைத் தனியாக இந்த உலகை எதிர்கொள்வதற்குத் தயார் செய்வதற்குத் தடையாக அமைகிறது. சமூகத்தைப் பற்றி இத்தகைய பயத்துடனே வளரும் பெண்கள் அடுத்த சந்ததிக்கும்

**பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் சார்பான குற்றங்களில் உலகிலேயே மிகவும் ஆபத்தான நாடுகளில் ஒன்றாக இந்தியா கருதப்படுகிறது. பெண்களுக்கான பாதுகாப்பான நாடுகள் பட்டியலில் இந்தியா 133வது இடத்தில் இருக்கிறது. ஒவ்வோர் இருபது நிமிடங்களுக்கும் இந்தியாவில் ஒரு பெண் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்.**

அதைக் கடத்துகின்றனர். கல்வி, வேலை, ஆராய்ச்சி போன்ற காரணங்களுக்காகப் பெண்கள் பயணம் செய்யும்போதும், இட மாற்றங்களின்போதும், தனியாக வசிக்க நேரும்போதும் குடும்பத்தினரின் பயம், அறிவுரை அனைத்தும் அந்தப் பெண் பாலியல் ரீதியாக எந்தத் துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது என்பதைச் சார்ந்தே இருக்கிறது. இதில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால் யாரும் பெண்களைக் கண்ணியத்துடன் நடத்துவது பற்றி ஆண் குழந்தைகளுக்குப் பாடம் எடுப்பதில்லை.

பெண்கள் தெய்வமாக ஆராதிக்கப்படும் நாட்டில், பெண்கள் மீதான குற்றங்கள் இவ்வளவு அதிகமாக இருக்கக் காரணம் என்ன? இது உண்மையிலேயே புனிதம்தானா? அல்லது புனிதம் என்கிற பெயரில் கட்டமைக்கப்பட்ட பெண்ணடிமைத்தனமா? எல்லாப் புனித பிம்பங்களையும் கட்டிக் காப்பாற்றுவது பெண்கள்தான். அப்படிக் காப்பாற்றும் கடமை தங்களுக்கே இருப்பதாகப் பெண்கள் நினைத்துக்கொள்வதுதான் மிகவும் அபாயகரமானது. காலம் காலமாக இவைதான் புனிதம் என்று சில விஷயங்கள் நம்மைச் சுற்றி சொல்லப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆனால் அதன் அடி ஆழத்தை ஆராய்ந்து பார்த்தால் அது பெண்களை முடக்கிப் போடும் ஒரு தந்திரம் என்று புரியவரும்.

எது புனிதமானது என்று கேட்டுப் பாருங்கள், தவறாமல் எல்லோரும் சொல்வது தாய்மை என்பதே. அது எல்லாப் பெண்களுக்கும் சாத்தியமா? எல்லாப் பெண்களும் தாய்மை என்பது புனிதமானது என்று நம்புகிறார்களா அல்லது நம்ப வைக்கப்படுகிறார்களா? தாய்மை என்னும் புனிதர் பட்டத்தை அடைந்தே ஆக வேண்டும் என்று பெண்களைப் பந்தயக் குதிரையைப் போல் இறக்கி விடுவது எந்த வகையில் நியாயம்? மருத்துவரீதியில் குழந்தையைப் பெற்றுக் கொள்ள முடியாத பெண்களும், குழந்தை பெற்றுக் கொள்வதில் விருப்பம் இல்லாத பெண்களும், இந்தப் பந்தயத்தில் கேள்வியே கேட்காமல் கலந்து கொள்வது சமுதாயத்தின் நிர்பந்தத்தினால் மட்டுமே. தான் அடையவே விரும்பாத ஒரு லட்சியத்திற்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த பெண்களின் உண்மையான லட்சியம் என்ன என்கிற கேள்விகள் எப்போதும் எழுவதில்லை. நீ தேடிச் செல்லும் அடையாளம் என்னவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். நீ முதலில் தாயாகிவிட்டு உன் வேலையைப் பார் என்பதே நம் சமூகம் பெண்களுக்கு வலிந்து சொல்லும் பாடம்.



இதில் சம பங்காற்றும் ஆண்களைக் கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல் கழற்றி விடுவது ஆண் மைய சமுதாயத்தின் சாமர்த்தியம். இது புரியாமல் மொத்த பொறுப்பையும் தலையில் சுமந்துகொண்டு இல்லாத புனிதத்தன்மைக்காகத் தன் உடல் ஆரோக்கியம், வாழ்க்கை லட்சியங்கள் அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு ஓடுவது தன் கண் முன்னால் தொங்கும் கேரட்டை அடைய குதிரை ஓடுவது போலத்தான். (7ஆம் பக்கம் பார்க்க..)

# ராணுவத்தின் எதிர்ப்பை மீறி சவுதிக்கு எப்–35 போர் விமானத்தை விற்பதற்கு அதிபர் டிரம்ப் ஒப்புதல்: சீனாவுக்கு கொண்டாட்டம்?



சவுதி அரேபியாவின் பட்டத்து இளவசர் முகமது பின் சல்மான் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். அவர் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் அதிபர் டிரம்ப்பை சந்தித்து பேசினார். அப்போது, சவுதி அரேபியாவுக்கு 48 எப்-35 போர் விமானத்தை விற்பனை செய்ய அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்தார். இது குறித்து பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், "சவுதி அரேபியாவுடனான எப்-35 போர் விமானத்தின் விற்பனையை தொடர விரும்புகிறேன்" என்றார்.

உலகிலேயே அத்தனை நாடுகளும் மிகவும் விரும்பும் போர் விமானமாக எப்-35 இருந்து வருகிறது. இந்த விமானத்தை ஏற்கனவே தனது நட்பு நாடுகள் உள்ளிட்ட 19 நாடுகளுக்கு அமெரிக்கா விற்றுள்ளது. இந்த விமானத்தை வாங்க சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சவுதி அரேபியா காத்திருக்கிறது. உலகளவில் தற்போதுள்ள போர் விமானங்களில் எதிரி நாடுகளால் கண்டறிய மிக மிக நவீனமான போர் விமானமாக எப்-35 இருந்து வருகிறது. இதனால் இதன் தொழில்நுட்பத்தை பெற சீனா பல வழிகளிலும் முயன்று தோற்றுள்ளது. சவுதி அரேபியா, சீனாவுக்கு மிகவும் நெருக்கமான நாடு.

எனவே, சவுதிக்கு எப்-35 போர் விமானத்தை தரும் பட்சத்தில் அதன் தொழில்நுட்பத்தை சீனா நேரடியாகவோ அல்லது ஹேக் செய்து மறைமுகமாகவோ கைப்பற்றக் கூடும் என அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் அஞ்சுகிறது. எனவேதான் சவுதிக்கு இந்த விமானத்தை தரக்கூடாது என பென்டகன் எதிர்ப்பு தெரிவிக்கிறது. அதையும் மீறி டிரம்ப் விற்க ஒப்புதல் வழங்கி உள்ளார். அமெரிக்க அரசியலமைப்பு சட்டப்படி, ஆயுத விற்பனை விவகாரங்களில் அதிபர் ஒப்புதல் அளித்தாலும் அதை நாடாளுமன்றத்தால் தடுத்து நிறுத்த முடியும். எனவே எதிர்க்கட்சிகள் இந்த விவகாரத்தை டிரம்புக்கு எதிராக முன்னெடுக்க வாய்ப்புள்ளது. (ஐ)


## டிரம்ப் – மம்தானி நாளை சந்திப்பு



பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அமெரிக்க அதிபர் டிரம்ப்பை சோரான் மம்தானி நாளை சந்திக்கிறார். நியூயார்க் மேயர் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட சோரான் மம்தானி அபார வெற்றி பெற்றார். மேயர் தேர்தலில் ஆளும் குடியரசுக் கட்சி வேட்பாளர் படுதோல்வி அடைந்த நிலையில் டிரம்ப்பை மம்தானி சந்திக்கிறார். வெள்ளை மாளிகையில் டொனால்டு டிரம்ப் - சோரான் மம்தானி சந்தித்து பேச உள்ளனர். (ஐ)



## அகதிகள் முகாமில் 14 பேர் பலி லெபனானில் மீண்டும் வான்வழி தாக்குதல்களை தொடங்கிய இஸ்ரேல்



சிடான் (லெபனான்) வான்வழி தாக்குதல்களில் 14 பேர் கொல்லப்பட்டதை அடுத்து, தெற்கு லெபனானில் இஸ்ரேல் மீண்டும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல், லெபனான் ஹிஸ்புல்லா கிளர்ச்சிப்படை இடையே 2024ம் ஆண்டு போர்நிறுத்தம் அமல்படுத்தப்பட்டது. அதன் பின்னர், சிடான் நகரத்தில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதாகவும், ஏராளமானோர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் கூறி உள்ளது.

இந் நிலையில், அங்கு செயல்பட்டு ஹமாஸ் இயக்கத்தின் பயிற்சி முகாம் மீது இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. அதன் பின்னர் தெற்கு லெபனானில் உள்ள பல கிராமங்களில் உள்ள இலக்குளை குறி வைத்து தாக்க போவதாக இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது.

அங்குள்ள மக்கள் உடனடியாக வெளியேறுமாறும் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. ஷெஹூர், டெய்ர், கிபா ஆகிய கிராமங்களில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல்களை தொடங்கி இருக்கிறது. ஹமாஸ் எங்கு இருந்தாலும் தாக்குதல் தொடரும் என்றும் அறிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேலின் குற்றச்சாட்டை ஹமாஸ் முற்றிலும் நிராகரித்து உள்ளது. சிடான் நகரில் எந்த இடத்திலும் பயிற்சி முகாம் இல்லை என்று மறுப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## 'நேட்டோ' அல்லாத முக்கிய கூட்டாளி சவுதிக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய டிரம்ப்

*சவுதி அரேபியாவை 'நேட்டோ' அல்லாத முக்கிய கூட்டணி நாடு என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்த அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், ஆயுத விற்பனை, அணுசக்தி ஒத்துழைப்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு உள்ளார். மேற்காசிய நாடான சவுதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான், அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார்.*

*வெள்ளை மாளிகையில் இளவரசர் முகமது பின் சல்மானுக்கு, அதிபர் டிரம்ப் விருந்தளித்தார்.*

*இதைத்தொடர்ந்து நடந்த சந்திப்பில், முதலீடு, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவை வலுப்படுத்த இருவரும் பேச்சு நடத்தினர்.*

*முடிவில், சவுதி அரேபியாவை, 'நேட்டோ' அல்லாத முக்கிய கூட்டணி நாடு என்று டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே ராணுவ ஒத்துழைப்பு அளிப்பதற்காக உருவாக்கப்பட்டது, 'நேட்டோ' அமைப்பு. இதில் இல்லாத சில நாடுகளுக்கு அமெரிக்கா இந்த அந்தஸ்தை வழங்குகிறது. இதன் மூலம், அந்த நாடுகள் அமெரிக்காவின் அதிநவீன ஆயுதங்களை வாங்கலாம். ராணுவப் பயிற்சி, தளவாடங்கள் வாங்க அமெரிக்காவிடமிருந்து கடன் அல்லது மானியம் பெறலாம். உளவுத்துறை தகவல்கள் பகிர்வு, கூட்டுப்பயிற்சி போன்றவை அதிகரிக்கும்.*

*ஆனால், 'நேட்டோ' நாடுகளுக்கு இருப்பது போன்ற ராணுவப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படாது.*

*இதைத் தொடர்ந்து, சவுதி அரேபியாவுக்கு 48 'எப் – –35' போர் விமானங்கள், 300 ராணுவ பீரங்கிகள் விற்பனை செய்யும் ஒப்பந்தத்தில் டிரம்ப் கையெழுத் திட்டார். அத்துடன், அமெரிக்க பாதுகாப்பு நிறுவனங்கள் சவுதியில் எளிதாக செயல்பட அனுமதிக்கும் வரலாற்று சிறப்புமிக்க பாதுகாப்பு ஒப்பந்தமும் கையெழுத் தானது. இதேபோன்று சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அடுத்த சில ஆண்டுகளில் அமெரிக்காவில், 88 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என உறுதி அளித்துள்ளார். இதில், 'எப்– – 35' போர் விமானங்களுக்கு மட்டும் 12 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என அறிவித்துள்ளார். மேற்காசிய நாடுகளை ஒருங்கிணைக்கும் அமெரிக்காவின் 'ஆப்ரஹாம் ஒப்பந்தம்' குறித்து பேசிய முகமது பின் சல்மான், பாலஸ்தீன மக்களுக்கு இரு நாடு என்ற நம்பகமான தீர்வு கிடைத்த பின்னரே அதில் இணைவோம் என்று கூறியுள்ளார்.*

*அமெரிக்கா– – சவுதி இடையிலான இந்த புதிய ஒப்பந்தங்கள், மேற்காசியாவில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது. (ஐ)*

## நுகேகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

“பேரணியில் பங்கேற்பீர்களா, இல்லையா எனக் கட்சியின் செயலாளர் என்னைக் கேட்டார். இதன்போது பங்கேற்கப்போவதில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டேன்.” - என்று நவீன் திஸாநாயக்க தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களுடன் இனி ஒருபோதும் அரசியல் பயணம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆனந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலத்திலும் பராமரித்து வந்த பேத்தியாரான (ஆனந்தசுதாகரது மனைவியின் தாயார்) தேவதாஸ் கமலா (வயது 75) என்பவர் நோயுற்று கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

தந்தையார் சிறையில் வாடுகின்ற நிலையில், பேத்தியும் இவ்வாறு உயிரிழந்த சம்பவம் சிறுவர்களாக இருக்கும் ஆனந்தசுதாகரின் பிள்ளைகளுக்கு மாத்திரமின்றி தமிழ் மக்களுக்கு ஒரு பேரதிர்ச்சியையும், துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதி ஆனந்தசுதாகரது மனைவியின் தாயார் தேவதாஸ் கமலா, 19.11 2025 அன்று திடீர் சுகவீனம் காரணமாக இயற்கை எய்தியுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான சச்சிதானந்தன் ஆனந்தசுதாகர் என்பவர், கடந்த 2008 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 17 ஆண்டு காலங்களாக ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியாக தென்னிலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

அவ்வாறிருக்க, கணவரது ஆயுள் தண்டனைத் தீர்ப்பையும் அவரது நீண்ட பிரிவையும் தாங்கவியலாது நோயுற்ற அவரது துணைவியார், கடந்த 2018 ஆம் ஆண்டு இயற்கை மரணம் எய்திவிட, பிள்ளைகளான பள்ளி செல்லும் பிஞ்சுகள் இரண்டும், தந்தையைப் பிரிந்து தாயையும் இழந்து நிர்க்கதி நிலையுற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அத்தருணத்தில், அவர்களது பேத்தியாரான கமலா, தனது இயலாமை முதுமை போன்றவற்றுக்கு மத்தியிலும் அந்தப் பிள்ளைகளைப் பார்த்துப் பராமரித்து வந்திருந்தார். இன்று, அந்தத் தாயாரும் உயிர் நீத்தமையானது,

அந்தப் பிள்ளைகளின் மனதில் ஆறாத்துயரை ஏற்படுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், அந்த மூத்த தாயார் தனது இறுதி மூச்சு வரை இந்தப் பேரக்குழந்தைகளுக்காகவே தனது சுவாசத்தை அர்ப்பணித்திருந்தார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

இந்நிலையில், சமூக அக்கறை கொண்ட அந்தத் தாயாரின் ஆத்மா சாந்தியுற வேண்டுமாக இருந்தால்,

ஒட்டுமொத்த உறவுகளையும் இழந்து அவலம் சுமந்து வாழ்கின்ற இந்தப் பள்ளிப் பிஞ்சுகளின் தந்தையான, அரசியல் கைதி ஆனந்தசுதாகர் விடுதலை பெற்று வீடுதிரும்பி, அந்த குழந்தைகளை அரவணைத்துப் பாதுகாப்பதற்கு தமிழ்ச் சமூகமாக நாம் வழிசமைக்க வேண்டும்.

அன்னாரது நல்லாத்மா பரமன் பதமடைய பிரார்த்திப்பதோடு, துயர் சுமந்து வாழும் பேரக்குழந்தைகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக, ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பு, தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.” - என்றுள்ளது.

## பஸ்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போட்டு விட்டு மீண்டும் பஸ்ஸில் ஓடிச் சென்று ஏறிய போது தவறி விழுந்துள்ளார்.

இந்தநிலையில் தலை அடிபட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்த பஸ் நடத்துநர் திருகோணமலை 5 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த லலித் குமார (வயது 41) என்னும் குடும்பஸ்தர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையில் திரைப்படம் தயாரிக்க வருமாறு இந்தியர்களுக்கு அமைச்சர் விஜித அழைப்பு



இலங்கையில் சுற்றுலாத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், திரைப்படத் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காகவும் வருகை தருமாறு இந்திய முதலீட்டாளர்களுக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் அழைப்பு விடுத்தார்.

இந்தியா மற்றும் இலங்கைக்கிடையிலான சுற்றுலா உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் நேற்று (19) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத்,

சமீபத்திய வருடங்களில், இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான மிகப்பெரிய சந்தையாக இந்தியா திகழ்கிறது. வலுவான விமானத் தொடர்புகள் மற்றும் கலாசாரப் பிணைப்புகள் மூலம், எமது இரு நாடுகளும் இயற்கையாகவே சுற்றுலாப் பங்காளிகளாக உள்ளன.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலானது, சுற்றுலா ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதில் எமக்குள்ள கூட்டு ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

சுற்றுலாத் துறையானது இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு மையப்புள்ளியாகும். இவ்வாரத்தில், எமது நாட்டுக்கு வருகை தந்த 2 மில்லியனாவது சுற்றுலாப் பயணியை நாம் வரவேற்றோம். அத்துடன் இவ்வருட இறுதிக்குள் 2.4 தொடக்கம் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்க்கிறோம். இது எமது சுற்றுலாத் துறையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லாகும். 2030 ஆம் ஆண்டளவில், 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளையும், 8 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தையும் நாம் இலக்காகக் கொண்டுள்ளோம்.

இந்த இலக்கை அடைவதற்கு, இலங்கை நிலைபேறான தன்மை, சந்தை பல்வகைப்படுத்தல், வலுவான விமானத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் மாற்றம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. மேலும், “சுற்றுலாத் துறையின் எதிர்காலம் பற்றிய ரியாத் பிரகடனத்திற்கு” அமைய, தேசிய சுற்றுலாத் திட்டமிடலில் செயற்கை நுண்ணறிவு (யுஐ) மற்றும் டிஜிட்டல் கருவிகளை இணைத்தல் உள்ளிட்ட பூகோளப் போக்குகளை உள்வாங்கவும் நாம் தயாராக உள்ளோம்.

சமீபகாலமாக இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமைக்கு, இலவச விசா வசதி மற்றும் இலக்கு வைக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்களே காரணமாக அமைந்தன. அதற்கமைய, இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கான ‘குறுகிய தூரப் பயணங்களில்’ மிகச் சிறந்த ஒரு இடமாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாம் நகரச் சுற்றுலா, கடற்கரைகள், மரபுரிமைச் சுற்றுலா, ஆஜஊநு சுற்றுலா (மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்), திருமணச் சுற்றுலா, திரைப்படச் சுற்றுலா மற்றும் கிரிக்கெட் சுற்றுலா போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். இந்திய நகரங்கள் முழுவதும் நாம் முன்னெடுத்த வீதிச் சாகசப் பயணங்கள், டீ2டீ செயற்பாடுகள் மற்றும் விமானச் சேவைப் பங்காண்மைகள் இந்த வெற்றிக்கு வழிவகுத்தன.

எமது 2,500 வருடகாலத் தொடர்பைக் கருத்தில் கொள்ளும்போது, பௌத்த யாத்திரைகள் மற்றும் இராமாயணப் பாதைகள் உள்ளிட்ட மதச் சுற்றுலாவில் குறிப்பிடத்தக்க வாய்ப்புகள் உள்ளதை அடையாளம் காண முடிகிறது. அதற்கமைய, விருந்தோம்பல் செயற்திட்டங்களை ஆரம்பிக்கவும், விழாக்கள் மற்றும் திரைப்படத் தயாரிப்புகளுக்காக இலங்கைக்கு மேலும் வருகை தருமாறும் இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களையும் முதலீட்டாளர்களையும் நாம் ஊக்குவிக்கிறோம்.

நாம் ஒன்றிணைந்து செயற்படும்போது இலங்கை - இந்திய ஒத்துழைப்பு மேலும் பலவடையும். அதற்கமைய இன்று நடத்தப்படும் இந்த நிகழ்ச்சித் திட்டம் புதிய வாய்ப்புகளைத் திறக்கவும், சுற்றுலாத் துறையில் எமது பங்காண்மையைத் தீவிரப்படுத்தவும் காரணமாக அமையும் என நான் நம்புகிறேன்,” என்று தெரிவித்தார். (ஐ)

# பெண்களும்.....

இந்தப் பூமி மனித இனத்திற்கு மட்டுமே சொந்தமானது அல்ல, பிற உயிரினங்களைப் போலத்தான் மனிதர்களும் இனப்பெருக்கம் செய்கின்றனர். ஆனால் எந்த ஓர் உயிரினமும் தன்னுடைய இளம் உயிரி தானாக உணவு தேடும் நிலையை அடைந்தவுடன் தன்னுடைய ஆதரவைக் குறைத்துக் கொள்கிறது. மனிதர்களின் தாய் பாசத்திற்குச் சற்றும் குறைந்ததல்ல யானைகள் தன் குட்டிகளின் மீது செலுத்தும் கவனம். ஆனால் வித்தியாசம் என்னவென்றால் மனித இனத்தில் மட்டும்தான் தன் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்காகத் தாய் தன் வாழ்நாள் முழுவதும் செலவிட நேருகிறது.

இந்தியப் பெண்கள் தாயானபின் வெறும் அம்மாவாக மட்டுமே அறியப்படுகின்றனர். அதற்குப்பின் அவர்கள் எல்லா விதமான தியாகங்களுக்கும் தயாராக இருக்கின்றனர். தாய்மை என்னும் கட்டமைக்கப்பட்ட புனித பிம்பத்தின் பின்னால் தன் வாழ்வைத் தொலைத்துவிட்டு அம்மாவாகவே இறந்து போகின்றனர். அவர்கள் உண்ண விரும்பிய உணவு வகைகள் எத்தனையோ? செல்ல நினைத்த பயணங்கள் எத்தனையோ? பேச விரும்பிய தோழமைகள் எவ்வளவோ? இவை அனைத்தையும் தாய்மை என்னும் ஒற்றை வார்த்தைக்குள் கட்டிப்போட்டு விட்ட சமுதாயமும் கேள்வி கேட்காமல் அதை ஏற்றுக் கொண்ட பெண்களின் மனநிலையும்தான் எல்லாவற்றிற்கும் காரணம்.

இவர்கள் புனிதம் என்று போற்றிப் பாதுகாக்கும் எதுவும் உடைத்துப் பார்த்தால், அதில் ஒன்றும் இல்லை, கீழே போட்டு விடுங்கள் வகையைச் சேர்ந்ததாகத்தான் இருக்கும். கடவுளின் அருகில் இருப்பவர்கள் அனைவரும் புனிதமானவர்கள் என்று நம்பப்படுகிறது. எனவே அந்தப் புனிதத் தன்மையை அடைய, கடவுளின் அருகில் இருக்கும் அனுபவத்தைப் பெற அனைத்து மனிதர்களுமே போட்டியிடுகின்றனர். இந்தப் போட்டியிலிருந்து முற்றிலும் புறந்தள்ளிவிட்ட ஒரு வகையினர் பெண்கள் எனலாம். ஆம், பெண் கடவுள்கள்கூட, பெண்கள் பூஜை செய்வதை ஏற்றுக் கொள்வதில்லை. என்ன ஒரு முரண்பாடு? பெண்களின் உடலில் இயற்கையாக நிகழும் மாற்றங்களைக் காரணம் காட்டி தூய்மை அற்றவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். இருந்தாலும் நாங்களும் புனிதமானவர்கள்தான் என்று நிரூபிக்க வேண்டி பெண்கள் வாழ்க்கை முழுவதும் முயன்று கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொரு பண்டிகையின் போதும் வீட்டைச் சுத்தம் செய்தல், சமையல், பூஜை என்று எல்லா வகையிலும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகின்றனர். இவற்றிலிருந்து விடுபட்ட பெண்களின் வாழ்க்கை முறையைச் சற்றே உற்று நோக்குங்கள். இத்தகைய பெண்களுக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக் கொள்ளவும், தனக்கான தருணங்களை மகிழ்வுடன் அனுபவிக்கவும் நேரம் கிடைக்கிறது. எந்த அழுத்தமும் இல்லாமல் உறவுகளுடன் பழக முடிகிறது. பொருளாதார ரீதியாகச் சுதந்திரமான வாழ்க்கையை வாழவும், வாழ்நாள் முழுவதும் நினைவில் நிற்கும் பயணங்களை மேற்கொள்வதும் சாத்தியமாகி இருக்கிறது.

உங்கள் கரங்களால் நீங்கள் நிகழ்த்த வேண்டிய அற்புதத் தருணங்கள் எத்தனையோ காத்திருக்கும் வேளையில், பெண்களை உடல் சார்ந்து தூய்மை அற்றவர்களாகவும், சமூகப் படிநிலையில் கீழானவர்களாகவும் கருதும் மத அமைப்புகளின் போலி புனித பிம்பங்களில் மாட்டிக் கொண்டு வாழ்நாளைத் தொலைப்பதில் எந்தப் பயனும் இல்லை.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!
www.jride.lk